**தலைப்பு - 402 - கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்படும் நிறுவனத்தினால் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்படுகின்ற வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படாதிருக்க வேண்டியதுடன், அவ்வருமானம் கட்டுநிதி சீராக்கல் கூற்றில் சீராக்கப்பட வேண்டுமென்பதும் கடந்த | குறிப்பிட்ட அவதானத்துடன் இணங்குகின்றேன். எதிர்வரும் வருடங்களில் குறித்த நேரொத்த ஒப்பீட்டுப் புள்ளி விபரங்கள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும். |

வருட ஒப்பீட்டுப் புள்ளி விபரங்கள் அதன் பிரகாரம் காட்டப்பட வேண்டுமென்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த இராஜாங்க அமைச்சினால் ஏனைய வருமான தலைப்பிற்காக சேர்க்கப்பட்டிருந்த வருமானமான ரூபா 21,159,297 ஆனது கட்டுநிதி சீராக்கல் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் கடந்த வருட ஒப்பீட்டுப் புள்ளி விபரங்கள் தொடர்பான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைப்புக் கொடுப்பனவு

நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 11,783,274 ஆக இருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் வைப்புக் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 11,473,437 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 309,837 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

இவ்வேறுபாடு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சினால் செய்யப்பட்டிருந்த தவறான கொடுக்கல் வாங்கலொன்று குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2021 நவம்பர் மாதத்தில் உரிய திருத்தங்கள் செய்யப் படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டும் திறைசேரி அறிக்கை SA-30 (வருடாந்த வைப்புக் கணக்கு பொழிப்பு அறிக்கை) பிரகாரம் பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்த பிரகாரம் மீளாய்வாண்டில் வைப்புக் கொடுப்பனவுகள் கூட்டுத்தொகை ரூபா 11,473,437 இல் காசு மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலம் செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள் உள்ளடங்கியுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடு ரூபா 309,837 ஆன பெறுமதியில் உள்ளடங்குவது தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்திற்கான ரூபா 197,727,000 மற்றும் ரூபா 112,110 ஆகும். இக் குறிப்பு விளையாட்டு அமைச்சின் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்தினூடாக எமது 6000-0-0-0-13-0-163-0 ஆம் இலக்க கணக்கில் தவறு திருத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் எமது 2021.12.31 இல் பரீட்சை மீதியின் பெறுமதி ரூபா 11,473,437.00 (காசு மற்றும் குறுக்குப் பதிவுகளின் கூட்டுத்தொகை) காசுப்பாய்ச்சல் கூற்றில் கொடுப்பனவின் கீழ் சரிாக காட்டப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும்.

இக்குறிப்பு திருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) முற்பணக் கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| முற்பணக் கொடுப்பனவுகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள பெறுமதி ரூபா 6,431,231 ஆகும். காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 6,852,198 ஆக இருந்ததுடன் முற்பணக் கொடுப்பனவுகளில் ரூபா 420,967 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | இணங்குகின்றேன். கல்வி அமைச்சிற்கு மாற்றலாகிச் சென்ற அதிகாரி ஒருவரின் மீதியொன்று Cigas முறைமையினூடாக கணக்கிடப்பட்டபோது ஏற்பட்ட தவறொன்று காரணமாக இவ்வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் செலவுக் கூற்று ACA2(ii) மாதிரியில் காசேட்டின் பிரகாரம் செலவு மற்றும் நி.பி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களில் செலவிடப்பட்ட செலவு (திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம்) தனித்தனியாக காட்டப்பட்டு மொத்தச் செலவு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 21 செலவு விடயங்களுக்கான திறைசேரி அறிக்கைப் பிரகாரம் ரூபா 574,295,695 ஆன செலவுகள் காசேட்டின் பிரகாரம் ரூபா 125,911,575 ஆன செலவுகளுடன் சேர்க்கப்பட்டு மொத்தச் செலவு ரூபா 700,207,270 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் | இதில் காட்டப்பட்டதன் படி SA-11 இன் பிரகாரம் வேறு தலைப்பின் மூலம் செய்யப்பட்டிருந்த வரவு வைத்தல்கள் மொத்தச் செலவில் (ACA-2(ii) உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நி.பி 208 இன் பிரகாரம் எதிர்காலத்தில் தனித்தனியாக வெளிக்காட்டப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும். |

ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களில் செலவிடப்பட்ட செலவு (திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம்) இல்லையென்பதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டியின் 2021/03 இன் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற நிறுவனத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2021 திசெம்பர் 31 இல் வெளிக்காட்டப்பட வேண்டிய போதிலும், இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் பொருட்கள் மற்றும் சேவைகள் பெறுவனவுகளுக்கான கொடுப்பனவிற்கு முடியாதிருந்த ரூபா 2,517,356 பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2021 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் 2022 சனவரி மாத Cigas அமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டபோது ஏற்பட்ட தவறொன்று காரணமாக குறிப்பிட்ட பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியாண்டிற்கான அனைத்துப் பொறுப்புக்களும் அடுத்துவரும் ஆண்டிற்கு கொண்டு செல்லப்படாது அந் நிதியாண்டிலேயே செலுத்தப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | 868,060 | அலுவல் முடிவடைந்தவுடன் பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய | 2021 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்திலிருந்து ஒக்தோபர் மாதம் வரை பெறப்பட்டிருந்த 18 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 377 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | போதிலும், 18 அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 868,060 ஆன முற்பணம் தீர்க்கப்படுவதற்கு 7 நாட்கள் முதல் 4 மாதங்கள் வரையான காாலமொன்று எடுக்கப்பட்டிருந்தது. | முற்பணங்கள் தொடர்பாக சுற்றறிக்கைப் பிரகாரம் தீர்ப்பதற்காக தாமதம் ஏற்பட்டிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் அதில் உள்ளடங்கியுள்ள 05 முற்பணங்கள் பெறப்பட்ட தினத்திலிருந்து 07 நாட்களுக்கு குறைவான காலப்பகுதியில் காசாக தீர்க்கப்பட்டிருந்தது. இவ்வாறு முற்பணத் தீர்ப்பனவுகளில் தாமதம் ஏற்பட்டிருந்தமை ஏப்ரல் மாதத்திலிருந்து உருவாகிய கொவிட் தொற்றுநோ்ய நிலைமை காரணமாக பொதுப் போக்குவரத்து வசதிகள் குறைந்தளவில் காணப்பட்டதால் அதிகாரிகள் அலுவலகத்திற்கு சமூகமளிப்பதும் குறைந்தளவில் காணப்பட்டதாகும். எனினும், எதிர்காலத்தில் முற்பணம் பெறப்பட்டு குறிப்பிட்ட பணி நிறைவடைந்ததும் குறித்த முற்பணம் தீர்க்கப்பட வேண்டுமென உள்ளகக் கடிதம் மூலம் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளதென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | எடுக்கப்படல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சர்வதேச வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்காக குழந்தைப் பருவத்திலிருந்தே திறமையுள்ள பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கு முறையான போசாக்கு மற்றும் பயிற்சியுடன் கவனித்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சுடன் நிறுவப்பட்ட 30 விளையாட்டு பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 16 பாடசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் கல்வி அமைச்சினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டில் ரூபா 210.87 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் 2021 ஆம் ஆண்டில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 11 ஆகும். (2020 இல் 5 ஆகும்) 2021 திசெம்பர் 31 வரை ரூபா 158.72 மில்லியன் செலவுகள் ஏற்பட்டிருந்ததுடன் 03 பாடசாலை மாத்திரமே | அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த மதிப்பீடு பரிசோதனை செய்யப்பட்டு விடயப் பரப்புடன் இணங்காத நிர்மாணங்கள் தொடர்பாக மீண்டும் கருத்திற் கொளள்ப்பட்டு மதிப்பீடு மீண்டும் அமைச்சிற்கு அனுப்பி வைப்பதற்கு படையினருக்கு குறிப்பிட்ட காலமொன்று எடுக்கப்பட்டிருந்தது. அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது முன்னர் இனங்காணப்படாத மேலதிகப் பணிகள் இனங்காணப்பட்டதால் மதிப்பீடு திருத்தத்திற்கு உட்பட்டமை மற்றும் குறித்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோது படையினருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டதன் காரணமாக செயற்திட்டம் தாமதமான பல சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டன. | செயலாற்றலை அடைந்து கொள்ள முடியுமான வகையில் செயற்திட்டம் குறிப்பிட்ட நியமங்களின் பிரகாரம் திட்டமிடப்பட வேண்டியதுடன் நிர்மாண நடவடிக்கைகள் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிகள் நிறைவடைந்திருந்தது. | | |
| (ஆ) | மிகவும் கஷ்டப் பிரதேசங்களில் மைதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 09 மாவட்டச் செயலகங்களின் 43 விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக மீளாய்வாண்டில் அமைச்சு ரூபா 60.825 மில்லியன் ஆன ஒதுக்கங்களை வழங்கியிருந்ததுடன் ரூபா 14.254 மில்லியன செலவிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் 38 விளையாட்டு மைதானங்களின் பணிகள் முடிவடைந்திருந்த போதிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத 02 செயற்திட்டங்கள் மற்றும் பணிகள் முடிக்கப்படாத 03 செயற்திட்டங்கள் காணப்பட்டன. | இச் செயற்திட்டத்தின் தலைமைக்கேற்ப வருடத்தின் தொடக்கத்தில் சகல செயற்திட்டங்களும் ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன் தேவையின் அடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள ஒழுங்கில் செயற்திட்டங்களுக்கான ஒதுக்கங்கள் பெறப்பட்டிருந்தது. வருடத்தனி முதல் பாதியில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாகவும் வருடம் பூராகவும் காணப்பட்ட அதிக மழையினால் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையாலும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தாமதமொன்று ஏற்பட்டிருந்தது. | நிர்மாணத்தின் குறிப்பிட்ட காலப்பகுதி சரியாகத் திட்டமிடல் மற்றும் திட்டமிடப்பட வேண்டிய செயற்பாடுகள் முடிப்பதற்காக நிர்மாண நடவடிக்கைகள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் இராஜாங்க அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் சிரேஷ்ட நிலையில் 03 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 03 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 34 வெற்றிடங்களும் காணப்பட்டன. | 2021 திசெம்பபர் 31 இல் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் சிரேஷ்ட, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் சில ஆட்சேர்ப்புக்களை செய்வதற்கு அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | தற்போதுள்ள பொது நிர்வாகச் சுற்றறிக்கையை பின்பற்றி திணைக்களத்தின் செயற்திறனை நேரடியாகப் பாதிக்கின்ற வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |